**சீதாவக பிரதேச சபை**

**கொழும்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பாகிய அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படடது.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானது சீதாவக பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நூல்நிலையப் புத்தகங்களை கொள்வனவு செய்யும் போது கிடைத்த கழிவு ரூபா 258,111 மூலதனச் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்யப்படுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிலிருந்து கழிவை அவ்வாறு கணக்கீடு செய்யாமைக்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 476,055 பெறுமதியான நூல்நிலையப் புத்தகங்கள் மூலதனச் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிலிருந்து நன்கொடைகளை அவ்வாறு கணக்கீடு செய்யாமைக்கு நடவடிக்கை எடுப்பேன் |
| (iii) | பழைய காணிகளில் சபையால் நிர்மாமணிக்கப்பட்ட கட்டிடடங்களின் பெறுமதி கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உரிய பதிவேட்டினை நாளதுவரையாக்கி நிர்மாணங்களின் பெறுமதியை கணக்கீடு செய்தல் வேண்டும். | சபைக்குச் சொந்தமான காணிகளின் சபையினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் நிர்மாணப்பெறுமதியை சொத்துக்கள் பதிவேட்டில் கணக்கீடு செய்தல் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்களிலிருந்து கிடைக்க வேண்டிய வட்டியாக ரூபா 2,699,864 காட்டப்பட்டிருந்தும் அம் மீதியில் நடைமுறை ஆண்டுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டியும் உள்ளடக்கப்படடிருந்தது. | சரி செய்யப்படுதல் வேண்டும். | மேலதிகமாக பெற வேண்டியதாகக் காட்டியுள்ள ரூபா 2,699,864 பணம் நாட்குறிப்பு பதிவின் மூலம் 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் செம்மையாக்கப்படும் என தெரிவிக்கிறேன். |
| (v) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,991,346 பெறுமதியான 05 நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துதல் வேண்டும். | 2019 நாட்குறிப்பு பதிவு இலக்கம் 04 இன் மூலம் நிலையான சொத்துக்களை கணக்குகளில் உள்ளடக்கியுள்ளேன். |

**(ஆ) நிகழதக்க பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்திலுள்ள களுஅக்கல கிராமத்தில் ஸ்தாபிக்கப்பட்ட "லெசர்வேல்ட் வோட்டர் பாக் தனியார் கம்பனியால்" சபைக்கு பொழுது போக்கு வரி செலுத்தாமையின் அடிப்படையில் சபையினால் அவிசாவளை மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த பொழுது போக்கு பூங்காவின் உரிமையாளரினாலும் சபைக்கு எதிராக எதிராக ஒரு வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி வரை அந்த வழக்கு இணக்கப்பாட்டிற்கு வந்திருக்காததுடன் அது சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்துதல் அல்லது வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்குமாயிருந்தால் அதற்கிணங்க நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்கிறேன். |

1.4 **இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சபைக்குச் சொந்தமான ஓடும் நிலையிலுள்ள 15 வாகனங்களின் எரிபொருள் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 06 மாதங்களுக்கு ஒரு தடவையாக எரிபொருள் பரிசோதனை நடவடிக்கை எதிர்காலத்தில் சரியாக செய்யப்படும் என தெரிவிக்கிறேன். |
| (ஆ) | 2016 யூலை 11 ஆந் திகதிய LGD/08/2016 ஆம் இலக்க மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றிக்கை | சபைக்குச் சொந்தமான காணிகளும் ஆதனங்களும் பௌதீக ரீதியில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் மூலம் காணிகளையும் கட்டிடங்களையும் இனங்கண்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்வதற்கும் கணக்குகளில் காட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2015 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 09/2015 ஆம் இலக்க மேல் மாகாண நிதி சுற்றறிக்கை. | கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டிய 03 வாகனங்கள் சம்பந்தமாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திருத்தம் செய்யப்பட வேண்டிய வாகனங்களைத் திருத்தம் செய்வதற்கும் கைதவரிப்புச் செய்ய வேண்டிய வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கும் உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரின் திட்டமிடல் சுற்றறிக்கை | உள்ளுராட்சி நிறுவனங்களின் மூலம் அறவிடப்படுகின்ற சேவைக்கட்டணங்கள் நகர அபிவிருத்திக்காக ஒரு வங்கி கணக்கில் வைப்புச்செய்யப்பட்டு இனங்காணப்பட்ட செயற்திட்டங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஹங்வெல்ல நகரத்தில் பொது மலசலகூட முறைமையைத் தயாரிப்பதற்காக ரூபா 10 மில்லியன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது கணக்கிலுள்ள பணம் போதியளவு இல்லததனால் மிகுதியான நிதி ஏற்பாட்டை வழங்கியதன் பின்னர் இச்செயற்திட்டத்தை அமுல்படுத்துவேன். |

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதிவிளைவுகள்

-----------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்து வருமானம் ரூபா 25,357,963 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டுகளுக்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 45,556,388 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

------------------------

**மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன.**

| | வருமான மூலகங்கள் | 2018 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2017 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரியும், வரியும் | 32,149,000 | 26,875,112 | 25,993,951 | 7,490,219 | 24,252,000 | 25,781,592 | 26,989,385 | 6,227,647 |
| (ii) | வாடகை | 23,455,000 | 24,799,612 | 24,234,929 | 885,648 | 19,289,000 | 19,298,329 | 19,909,434 | 196,929 |
| (iii) | உத்தரவுப் பத்திர கட்டணம் | 2,016,000 | 2,122,004 | 2,122,004 | - | 2,002,000 | 2,148,631 | 1,700,450 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 212,562,000 | 198,691,312 | 212,898,244 | 130,504,124 | 191,713,000 | 159,244,910 | 158,491,619 | 120,510,509 |
| | | 270,172,000 | 252,488,100 | 265,249,128 | 138,879,991 | 237,256,000 | 206,473,462 | 207,090,888 | 126,935,085 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **வீதவரி**<br>மீளாய்வாண்டின் இறுதித்திகதியில் நிலுவையான வீதிவரி மீதி ரூபா 7,291,836 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 5,407,530 ஆனது முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வீதவரியாகும். 74 சதவீதமான இந்த நிலுவையான வீதவரி வருமான மீதியை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வீதவரி நிலுவையை அறவீடு செய்வதற்காக உப அலுவலகத்திற்கு இலக்குகளை வழங்கி அதன் செயல்முன்னேற்றமானது வருமானத்தை சேகரிக்கும் செயல்முன்னேற்ற மீளாய்வுக்கூட்டத்தின் போது கலந்துரையாடப்படும். 2019.04.30 ஆந் திகதியில் வீதவரியானது 2018.12.31 இல் உள்ளவாறான நிலுவைப் பணத்தில் ரூபா 266,181 அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆதனங்களைத் தடைசெய்யும் உத்தியோகத்தர்களுக்கு நிலுவைப்பட்டியலை வழங்கி ஆதனங்களை தடைசெய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**(ஆ) ஏக்கர் வரி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாதுக்கை உப அலுவலகத்தில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை ஏக்கர் வரி ரூபா 188,235 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா 176,125 ஆனது 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்குரியதாகும். இந்த நிலுவையை அறவீடு செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு காலதாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த ஏக்கர் வரி நிலுவைப்பணத்தை அறவீடு செய்வதற்காக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உரிமையாளர்கள் இல்லாத ஆதனங்களை இனங்கண்டு பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டு வரும் ரூபா 52,044,000 தொகையான கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண மீதியை அறவீடு | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2014 ஆம் ஆண்டிற்கான பணம் 2019.02.12 ஆந் திகதி கிடைத்துள்ளது. 2015 சனவரி மாதத்திலிருந்து யூன் மாதம் வரையான காலத்திற்குரிய பட்டியல்கள் மேல்மாகாண வருமான ஆணையாளருக்கு |

| | | |
|---|---|---|
| செய்வதற்கு சபையினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2015 யூலை மாத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான காலத்திற்குரிய பட்டியல்கள் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. 2016 சனவரியிலிருந்து திசெம்பர் மாதம் வரையான பட்டியல்களைப் பரீட்சிப்பதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக பட்டியல்களை எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள், பொது வீதிகள் என்பன தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்தலும் நிருவகித்தலும் பொது மக்களின் நல்வாழ்க்கை, வசதிகள் நலன்புரிகள் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் இஹலமாவல்கமவிலிருந்து கஹஹேன வீதியின் புகையிரத குறிகாட்டிக்கு அருகில் மதகு வரையான வீதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 353,922 ஒதுக்கிடு செய்யப்பட்டிருந்தும் 2019 ஏப்ரல் வரை அந்த வீதி பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண வேலைகளை திட்டமிட்டவாறு தாமதமின்றி பூர்த்திசெய்தல் வேண்டும். | உரிய நிர்மாண வேலையின் ஒரு பகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) வேலை ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,732,430 தொகையான 09 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண வேலைகளை திட்டமிட்டவாறு தாமதின்றி நிறைவேற்ற வேண்டும். | ஒரு செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதியான 07 செயற்திட்டங்களின் வேலைகளை பின்னர் பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |

**(இ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| | | |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 27,863,489 தொகையான 19 செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன. | திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகளை சரியாக இனங்காண்தல் வேண்டும். | உரிய வேலைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| | | |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் சம்பந்தமாக 2030 நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மீளாய்வாண்டிற்கான செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தும் பொதுப் பயன்பாட்டு சேவைகள், வன வளங்களை பாதுகாத்தல், மின்வலுவைப் பாதுகர்த்தல் என்பன தொடர்பான விடயங்களின் இலக்குகளும் செயல்முன்னேற்றமும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 09 தொழில்முயற்சி உரிமையாளர்களால் சுற்றாடல் உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 38,543 பரிசோதனைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தும் சபையினால் வெளிக்கள பரிசோதனை நடவடிக்கை மேற்கொண்டு சுற்றாடல் உத்தரவுப் பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. | தாமதமின்றி சுற்றாடல் உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 02 இற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் 02 சுற்றாடல் குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டள்ளது. ஏனையவை சுற்றாடல் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |
| **(ஆ)** | **சமூகச் சபையைத் தோற்றுவித்தல்** | | |
| | சபை அதிகாரப் பிரதேசத்தில் கிராம சேவையாளர் பிரிவுகளில் சமூக சபையைத் தோற்றுவிப்பதற்கு ஒவ்வொரு சபைப் பிரதேசங்களிலும் முகர்களுக்கு ஆலோசனை | சமூக சபையைத் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட புதிய உறுப்பினர்கள் சபைக்காக சமூக சபை நியதிச்சட்டத்தை வழங்கி அவர்களை இதற்காக ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்தும் 2018 ஆம் ஆண்டில் சமூக சபை தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டிற்காக 2019.02.16 ஆந் திகதி முதலாவது சமூக சபையைத் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. |

**3.3 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

---------------------------------------------------------

**ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்**

---------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரித்த பதவியணியனர் 222 ஆக இருந்ததுடன் ஆரம்ப மற்றும் இரண்டாந் தரங்களில் 29 வெற்றிடங்கள் காணப்பட்டன. உள்ளபடியான பதவியணியினர் 308 ஆக இருந்ததுடன் அவற்றில் 115 பதிலீட்டு ஊழியர்களாகும். | ஊழியர் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கும் பதிலீட்டு ஊழியர்களை முறைமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இரண்டாம் மட்டத்திலுள்ள 06 உத்தியோகத்தர்கள் 03 நூலகர் பதவிகள், 01 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன. அப்பதவி வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளுராட்சி ஆணையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. வருமான பரிசோதகர்களை சேர்த்துக்கொள்வது தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு காணப்படுவதனால் அதன் தீர்ப்பு கிடைக்கும் வரை அது தொடர்பான நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. வெற்றிடம் காணப்படுகின்ற சுகாதார நிர்வாக பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.<br><br>ஆரம்ப மட்டத்திலுள்ள 23 ஊழியர்கள் 05 சாரதிகள், 11 வெளிக்கள வேலையாளர்கள், 04 சுகாதார வேலையாளர்கள், நூலக உதவியாளர், பாரமான வாகன இயந்திர இயக்குனர், மயான பொறுப்பாளர் என்பனவாக 23 வெற்றிடங்கள் காணப்பட்டன. அந்த ஊழியர்களை எதிர்காலத்தில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.<br><br>115 தற்காலிக ஒப்பந்த ஊழியர்கள், நிரந்தர ஊழியர்கள் விடுமுறை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் கடமைகளை |

| | | |
|---|---|---|
| | | கவனிப்பதற்காக இந்த பதிலீட்டு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். |

**3.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

**கடை வாடகையை மதிப்பீடு செய்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் சபையின் கடைகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் புதிய மதிப்பீட்டுப் பணத்தை கடை உரிமையாளர்கள் நிராகரித்ததன் காரணமாக ரூபா 282,075 தொகை சபையினால் இழக்கப்பட்ருந்தது. | திருத்திய மதிப்பீட்டுப் பெறுமதிக்கு கடை வாடகையினை அறவீடு செய்வதற்கு தாமதின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018.11.01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ஹங்வெல்ல புதிய வர்த்தகத்திதொகுதியிலுள்ள கடைகளின் மாதாந்த வாடகைகளை திருத்தம் செய்து அது தொடர்பாக கடைக்காரர்களுக்குத் தெரிவிக்கப்பட்டள்ளது. எனினும் அந்த திருத்திய வாடகையைச் செலுத்துவதற்கு முடியாது எனத் தெரிவித்து சடைக்காரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகள் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது திருத்திய மதிப்பீடு கிடைத்துள்ளது. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மேல் மாகாண திண்மக் கழிவு முகாமைத்துவ அதிகாரசபையின் மூலம் வழங்கப்பட்ட பெறுமதி குறிப்பிடப்படாத ஒரு உழவு இயந்திரமும் இழுவைப் பெட்டியும் 2014 ஆம் ஆண்டிலிருந்து ஹங்வெல்ல தனியார் கராஜில் பழுதுபார்க்கப்படாது களற்றி போடப்பட்டிருந்ததுடன் 2019 ஆகஸ்ட் வரை பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வளங்களிலிருந்து உச்ச அளவை பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். | 2018.09.10 ஆந் திகதி கருவெல மாநகரசபைக்கு பழுதுபார்ப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்ட உழவு இயந்திரத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கை முடிவடைந்து எங்கள் சபைக்கு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் மற்றைய உழவு இயந்திரத்தை பழுதுபார்தப்பதற்காக கருவெல மாநகரசபைக்கு அனுப்பிவைக்கப்படும் என தயவாகத் தெரிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பழுதுபார்ப்பதற்காக கருவெல மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 49-0266 ஆம் இலக்க உழவு இயந்திரம் இதுவரை சீதாவக்க பிரதேச சபைக்கு எடுத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வளங்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். | 49-0266 ஆம் இலக்க உழவு இயந்திரம் 2018.08.27 ஆந் திகதி நடைபெற்ற நிதி மற்றும் கொள்கை தயாரிப்பு குழுவின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2018.09.10 ஆந் திகதி பழுதுபார்ப்பதற்காக கடுவெல மாநகரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அடுத்துவரும் 14 நாட்களுக்குள் உரிய பழுதுபார்ப்பை முடிவுறுத்தலாம் என எங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | 2018 ஆம் ஆண்டின் போது சபை மண்டபத்திற்கு புதிதாக ஒலிபெருக்கி இயந்திரம் பொருத்தியதன் பின்னர் சபை மண்டபத்தில் செயற்படும் நிலையில் காணப்பட்ட 22 மைக்ரோ போன்கள் அகற்றப்பட்டிருந்ததுடன் அவை விளைவற்று களஞ்சியத்தில் காணப்பட்டன. | வளங்களிலிருந்து உச்ச அளவில் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். | களஞ்சியத்திலுள்ள 22 மைக்ரோ போன்களையும் ஆலாசனைக் குழுக்களை நடாத்துவதற்காக பயன்படுத்துவதற்கு தற்பொழுது கட்டளையிடப்பட்டுள்ள மேசைகள் பெற்றுக்கொள்கையில் அதற்காகப் பயன்படுத்துவதற்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2005 ஆம் ஆண்டிற்கு முன்னர் பயன்படுத்தப்பட்டுள்ள பழைய கட்டிடம் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | வளங்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல் | தற்பொழுது ஹங்வெல்ல நரகத்திலுள்ள சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட ஒரேயொரு விழா மண்டபத்திற்காக மலசலகூடமுறைமை இல்லாததனால் இக் கட்டிடத்தின் மேல் மாடியின் ஒரு பகுதியில் பெண்கள் மற்றும் ஆண்கள் மலசலகூட முறைமையைத் தோற்றுவிப்பதற்காகவும் கீழ் மாடியை களஞ்சியமாகப் பேணுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. |

### 3.5.2 வாகனக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கெப் வாகனம் பொறலுகொட பிரதேசத்தில் முச்சக்கர வண்டியுடன் மோதி இடம்பெற்ற விபத்து சம்பந்தமாக வாகன கோவையில் அல்லது வாகனம் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இடம்பெறுகின்ற விபத்துக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104 மற்றும் 109 இன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| சம்பவக் குறிப்பு புத்தகத்தில் அல்லது நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டில் பதியப்படவில்லை. | | செயற்படுவதாகத் தெரிவிக்கிறேன். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| போதியளவு உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை. | செயற்திறனாக உள்ளகக் கணக்காய்வை செயற்படுத்துதல் வேண்டும். | அந்த உள்ளகக் கணக்காய்வு ஐயவினா தொடர்பாக மேற்பார்வை நடவடிக்கை இடம்பெற்றுவருவதுடன் அந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. |